# CEFTS ஊடாக HSBC கடன் அட்டை கொடுப்பனவுகள்

கடன் அட்டைத் தீர்ப்பனவுகளுக்கான பல்வேறு விருப்பத்தேர்வுகளுக்கு உரித்துடைய புதிய அங்கத்தவர்கள் என்ற முறையில, HSBC வாடிக்கையாளர்கள் இப்போது தமது HSBC கடன் அட்டைக் கொடுப்பனவுகளை ஏனைய வங்கிக் கணக்குகளிலிருந்து CEFTS ஊடாகச் செலுத்த முடியும். உங்கள் ர்ளுடீஊ கடன் அட்டைக் கொடுப்பனவுகளை இலகுவாகச் செலுத்துவதற்கு இடமளிக்கும் இந்த வசதி உங்களுக்கு மன நிம்மதியைத் தரும் என்பதில் ஐயமில்லை. உங்கள் ஏனைய வங்கி ஒன்றிலிருந்து பணத்தைப் பரிமாற்றம் செய்வது இலகுவானது.

### நன்மைகள்

- வேகமானது

CEFTS கொடுப்பனவுகள் உடனடியாக HSBC க்கு அனுப்பப்படுகின்றன (தயவுசெய்து நேரத்தை வரவு வைக்க குறிப்புகளைப் பார்க்கவும்)

- பணத்தை மீதப்படுத்துகிறது

பரிமாற்றம் செய்யப்படும் பெறுமதி எவ்வளவானாலும் ஒரு CEFTS பரிவர்த்தனைக்கு அதிகபட்ச கட்டணம் ரூபா 30 மட்டுமே ஆகும். மூன்றாம் தரப்பு கட்டண வழி மூலமான உங்களது கொடுப்பனவு ரூபா 4,000 க்கு மேல் இருந்தால், நீங்கள் செலுத்தும் கட்டணங்களின் வித்தியாசத்தை நீங்கள் அனுபவிக்க முடியும்.

- நேரத்தை மீதப்படுத்துகிறது

பணம் செலுத்த பணத்தை திரும்பப் பெறவோ, மற்றும் ஒரு HSBC கிளைக்கு அல்லது மூன்றாம் தரப்பு கட்டண வழிக்கு செல்லவோ, வரிசையில் நிற்கவோ வேண்டியதில்லை. நீங்கள் எங்கிருந்தாலும் ஒன்லைன் மூலம் கொடுப்பனவை செய்ய முடியும்.

- எளிதாக கண்காணித்தல்

ஒரு டிஜிடல் பதிவு மற்றும் கொடுப்பனவு உறுதிப்படுத்தலை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்

- பாதுகாப்பானது

குறிப்பாக COVID 19 நோய்த்தொற்று காலப்பகுதியில் இது சுகாதார ரீதியாக பாதுகாப்பானது என்பதால் நீங்கள் சன நெரிசலான இடங்கள், வைப்புச் செய்ய வரிசையில் நிற்றல் போன்றவற்றை தவிர்க்கலாம் என்பதுடன், உங்களுடன் அதிக அளவு பணத்தை எடுத்துச் செல்லவும் வேண்டியதில்லை

- வசதியானது

உங்கள் வசதிக்கேற்ப எங்கிருந்தும் எப்போது வேண்டுமானாலும் பணப் பரிமாற்றத்தை செய்யலாம்

உங்கள் அட்டைக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு பின்வரும் எளிய படிமுறைகளைப் பின்பற்றுங்கள்:

1. உங்கள் ஏனைய வங்கிக் கணக்கின் ஒன்லைன் வங்கிச் சேவையில் பிரவேசியுங்கள்.
2. பரிமாற்ற விருப்பத்தேர்வின் கீழ் 'CEFTS/Instant Transfer' என்பதைத் தெரிவு செய்யுங்கள்.
3. கிளை என்ற முறையில் 'HSBC Head Office/Fort' என்பதைத் தெரிவு செய்து, உங்கள் HSBC கடன் அட்டை இலக்கத்தையும் தொகையையும் பதிந்து, பரிமாற்றம் செய்யுங்கள்.

அவ்வளவுதான்!

ஏனைய வங்கிகளுக்கான கடன் அட்டைக் கொடுப்பனவுகளுக்கு இடமளிக்கும் CEFTS அங்கத்துவ வங்கிகள் / நிதி நிறுவனங்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

கட்டம் கட்டமான வழிகாட்டலுக்கு, தயவுசெய்து உறுப்பு CEFTS நிதி நிறுவனத்திற்கு பிரவேசியுங்கள் : https://www.hsbc.lk/credit-cards/cefts-settlement/#CEFTSmember

1. அக்ஸிஸ் வங்கி
2. இலங்கை வங்கி
3. கார்கில்ஸ் வங்கி
4. கொமர்ஷல் வங்கி
5. கொமர்ஷல் லீசிங் அன்ட் ஃபினான்ஸ்
6. DFCC வங்கி
7. ஹபீப் வங்கி
8. ஹற்றன் நஷனல் வங்கி
9. MCB வங்கி
10. தேசிய அபிவிருத்தி வங்கி
11. தேசிய சேமிப்பு வங்கி

12. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி

13. பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன்

14. பப்ளிக் வங்கி

15. சம்பத் வங்கி

16. செங்கடகல ஃபினான்ஸ்

17. செலான் வங்கி

18. SDB

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**01. எனது HSBC கடன் அட்டைக் கொடுப்பனவை மற்றுமொரு வங்கி ஊடாகச் செலுத்துவது எப்படி?**

மேலே பட்டியலிடப்பட்டுள்ள 18 வங்கிகளிலிருந்து, அந்தந்த வங்கியின் online வங்கிச் சேவை (இணையத்தள வங்கிச் சேவை அல்லது Mobile App) ஊடாக உங்கள் HSBC கடன் அட்டைக் கொடுப்பனவுகளை அனுப்பலாம்.

**02. இதற்காக என்னிடமிருந்து எவ்வளவு அறவிடப்படும்?**

இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு அமைப்புகள் தொடர்பான 2020இன் 20ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், online வங்கிச் சேவை அல்லது Mobile App மூலம் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு CEFTS கொடுக்கல் வாங்கலுக்கும் ஆகக்கூடியதாக ரூ.30 மட்டுமே அறவிடப்படலாம்.

**03. செலுத்தப்பட்ட கொடுப்பனவின் பெறுமதிக்கு எனது கடன் அட்டையை உடனடியாகப் பயன்படுத்த முடியுமா?**

ஆம், உங்களுடைய “கிடைக்கும் கடன்” உடனுக்குடன் இற்றைப்படுத்தப்படும் என்பதால், நீங்கள் உடனடியாகவே உங்கள் கடன் அட்டையைப் பயன்படுத்தலாம்.

04. **கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதியில் எந்த நேரத்திலும் CEFT கொடுப்பனவுகளைச் செலுத்த முடியுமா?**

கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதியில் பி.ப. 5.30 வரை செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள், அதே நாள் கொடுப்பனவாக உங்கள் கடன் அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும். அட்டையின் பேரில் ஏதேனும் அறவீடுகள் விதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, காலக்கெடு நேரத்திற்கு முன்பே கொடுப்பனவைச் செலுத்தும்படி நாம் உங்களுக்கு பரிந்துரை செய்கின்றோம்.

05. **HSBC கடன் அட்டைக்குக் கொடுப்பனவு செய்ய நான் எந்த விருப்பத்தேர்வை தெரிவுசெய்ய வேண்டும்?**

குறிப்பிட்ட வங்கியின் பெயரில் படிப்படியான வழிகாட்டி இல்லாவிட்டால், தயவசெய்து பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றவும்.

பணம் அனுப்புவதற்கான விருப்பத்தேர்வு வழமையாக "Transfer" விருப்பத்தேர்வின் கீழ் அல்லது, சில சந்தர்ப்பங்களில், under "Bill Payment / Biller Management" விருப்பத்தேர்வில் காணப்படும்.

- "Transfer" விருப்பத்தேர்வின் கீழ் இருந்தால், நீங்கள் fund transfer, transfer money, transfer to other bank / real time transfer / CEFTS transfer போன்ற விருப்பத்தேர்வுகளில் ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டியிருக்கும்.
- "Bill Payment" விருப்பத்தேர்வின் கீழ் இருந்தால், புதிய Bill Payee ஒன்றைச் சேர்க்கும் (உதா. 'Add New Payee' அல்லது ஒரு கூட்டல் + அடையாளத்தைச் சேர்த்தல்) விருப்பத்தேர்வை நீங்கள் நாட வேண்டியிருக்கும்.

பணத்தைப் பரிமாற்றம் செய்ய அல்லது பில்களைச் செலுத்த தொடங்குவதற்காக, உங்கள் HSBC கடன் அட்டை விபரங்ளை சேமிக்கப்பட்டபெறுநர் (Saved Payee) என்ற முறையில் நீங்கள் சேமிதம் (Save) செய்ய வேண்டியிருக்கும். (Save) பண்ணும் விருப்பத்தேர்வு உங்களிடம் இருந்தால், HSBC கடன் அட்டை விபரங்ளை Save பண்ணுவது மிகவும் வசதியானது. ஏனெனில், நீங்கள் அடுத்த முறை கொடுப்பனவைச் செலுத்தும்போது அட்டை விபரங்ளைப் பதியும்படி கேட்கப்பட மாட்டீர்கள்.

06. **பணத்தைப் பரிமாற்றம் செய்யும்போது அல்லது Payee ஐ Save பண்ணும்போது நான் பதிய வேண்டிய தகவல் அல்லது தேர்வு என்ன?**

நீங்கள் "Transfer" அல்லது "Bill Payment" விருப்பத்தேர்வைப் பயன்படுத்தினாலும், என்ற முறையில் HSBC கடன் அட்டை விபரங்ளை save பண்ண வேண்டியிருந்தாலும், நீங்கள் பதிய வேண்டிய தகவல் அல்லது தேர்வுக்கான விருப்பத்தேர்வுகள் பின்வருமாறு.

- பற்றுக் கணக்கு - நீங்கள் எந்த மற்றைய வங்கிக் கணக்கிலிருந்து கொடுப்பனவை அனுப்ப விரும்புகின்றீர்களோ அந்த மற்றைய வங்கிக் கணக்கை (பற்றுக் கணக்கு) தெரிவு செய்யுங்கள்.
- வங்கியின் பெயர் - "HongKong and Shanghai Banking Corporation" அல்லது "HSBC" என்பதைத் தெரிவு செய்யுங்கள்.
- வங்கிக் கிளை - கேட்கப்படின், "Head Office / Fort / 001" ஆகிய விருப்பத்தேர்வுகளில் ஒன்றைத் தெரிவு செய்யுங்கள்.
- கணக்கிற்கு அல்லது கடன் அட்டைக்கான பரிமாற்றம் - கடன் அட்டையைத் தெரிவு செய்யுங்கள்.
- கடன் அட்டை இலக்கம் - 16 **எண்கள்** கொண்ட HSBC கடன் அட்டை இலக்கத்தைப் பதியுங்கள்.
- தொகை - நீங்கள் பரிமாற்றம் செய்ய விரும்பும் தொகை.

கொடுக்கல் வாங்கலை ஊர்ஜிதம் (Confirm) செய்யுங்கள் - உங்கள் Online Banking / Mobile App பிரவேசக் கடவுச்சொல்லை அல்லது ஒரே தடவைக் கடவுச்சொல் (One Time Password - OTP). போன்ற விபரங்களைப் பதியும்படி நீங்கள் கேட்கப்படலாம். திரையில் கேட்கப்படும் விபரங்களைப் பதிந்துவிட்டு, கொடுக்கல் வாங்கல் நறைடைந்ள்ளது / வெற்றிடைந்துள்ளது (Transaction has been completed / Successful). என்ற வாசகம் திரையில் தோன்றும் வரை கொடுப்பனவு நடவடிக்கையைத் தொடருங்கள்.

**முக்கிய குறிப்புகள்**

- செலுத்தப்படும் சகல கொடுப்பனவுகளும் "பயன்படுத்தக்கூடிய கடன் எல்லை" என்பதன் கீழ் உடனடியாகவே அட்டை வைப்பாளரின் கடன் அட்டைக் கணக்கில் இற்றைப்படுத்தப்படும்.

- முன்னைய கொடுப்பனவு விபரங்கள் ("கணக்கில் பதியும் திகதி") மற்றும் கடன் அட்டை "மீதி" என்பன வங்கியின் அடுத்த வேலை நாளில் இற்றைப்படுத்தப்டும்.

- செலுத்தப்பட வேண்டிய நாட்களில் பி.ப. 5.30 வரை செய்யப்பட்ட கொடுப்பனவுகள் அதே நாள் கொடுப்பனவு என்ற வகையில் அட்டை வைப்பாளரின் கடன் அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

- விடுமுறை தினங்கள் அல்லது வார இறுதி நாட்களில் செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் "கணக்கில் பதியும் திகதி" அடுத்த வேலை நாளில் காட்டப்படும்.